நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
இராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–600 028

முன்னிலை: முனைவர். கா. பாஸ்கரன்,இ.ஆ.ப.

ந.க.எண். 18428/2019/உவ நாள். 27.11.2020

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி தகவல் தொழில் நுட்பப் பணியமைப்பு – திருமதி.ஜே.புனிதவதி – தருமபுரி நகராட்சி புள்ளி விவரக் குறிப்பாளர், – பதவியிலிருந்து உதவி திட்ட அமைப்பாளராக பதவி உயர்வு ஆணை வழங்குதல் – தொடர்பாக

படிக்கப் பட்டவை: 1)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (நப1) துறை அரசாணை 162/ நாள். 15.11.2016
2)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (நப1) துறை அரசாணை எண். 225/13.06.2019
3)நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 18428/2019/உவ நாள். 27.02.2020
4)நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.18428/2019//உவ நாள். 24.04.2020

*******

ஆணை:

படிக்கப்பட்டவை 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளின்படி பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையில் 2019–2020ம் ஆண்டில் புள்ளி விவரக் குறிப்பாளர் பதவியிலிருந்து உதவி திட்ட அமைப்பாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க தகுதியானவர்களின் பட்டியலை அங்கீகரித்து ஆணை வெளியிடப்பட்டது.

படிக்கப்பட்டவை 4ல் கண்ட செயல்முறைகளில் பதவி உயர்வு பெற்ற செல்வி.க. வசந்தி, பதவி உயர்வு வழங்கிய பின்னர் பதவி உயர்வினை துறந்ததால், அதனை தொடர்ந்து ஏற்பட்ட காலி பணியிடத்தில் தமிழ்நாடு நகராட்சி பணிவிதிகள் 1970, விதி 26ன் திருமதி.ஜே.புனிதவதி, தர்மபுரி நகராட்சி புள்ளி விவரக்குறிப்பாளர்க்கு உதவி திட்ட அமைப்பாளராக பதவி உயர்வு வழங்கி ஆற்காடு நகராட்சியில் பணியமர்த்தி ஆணையிடப்படுகிறது.

மேற்படி புள்ளி விவரக்குறிப்பாளரை பணியிலிருந்து விடுவித்து உதவி திட்ட அமைப்பாளராக பணியில் சேர அனுமதித்து, பணியில் சேர்ந்த விவரத்தினை தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் செயல்முறை ஆணைகள் பெற்றமைக்கு ஒப்புகை அளிக்க சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

ஒம்/– கலைச்செல்வி மோகன்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்

திருமதி.ஜே.புனிதவதி,
புள்ளி விவரக்குறிப்பாளர்,
தருமபுரி நகராட்சி– நகராட்சி ஆணையர் வழியாக

நகராட்சி ஆணையர்,
தருமபுரி நகராட்சி மற்றும் ஆற்காடு

நகல்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் சேலம்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்